IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE,
GUDIYATHAM, VELLORE DISTRICT.

C.C.NO.144/2023

DEPOSITION OF WITNESS P.W.2

| | | |
|---|---|---|
| NAME | : | LAKSHMI |
| HUSBAND NAME | : | MUNISAMY |
| VILLAGE | : | AMBUR |
| OCCUPATION | : | COOLIE |
| AGE | : | 60 |

Solemnly affirmed in accordance with the provisions of Section 3 and 4 of the Indian Oaths Act 1969, r/w rule 35 and 36 of Criminal Rules of Practice 2019 of the 10th day of September 2025.

**சாட்சிக்கு நீதிமன்ற ஊழியரால் சத்திய பிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் பதிவு செய்யப்படுகிறது.**

எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை:**

நான் ஆம்பூர் பகுதியில் குடியிருந்து கூலி வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். 1வது எதிரி எனது மருமகன் ஆவார். 2வது எதிரி எனது மகளின் மாமனார் ஆவார். தேதி, மாதம் ஞாபகம் இல்லை. சுமார் 3 வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் மாலை நான் ஆம்பூரில் உள்ள எனது வீட்டில் இருந்தபோது எனது மகள் ரேவதி எனக்கு போன் செய்து என்னை எனது கணவரும், எனது மாமனாரும் சேர்ந்து நிறைய அடித்துவிட்டார்கள் என்றும், என்னால் முடியவில்லை என்றும் சொன்னார். நான் ஆம்புலன்சில் மருத்துவமனைக்கு செல்லுமாறு சொல்லிவிட்டு நானும் மருத்துவமனைக்கு வருவதாக சொன்னேன். மறுநாள் காலையில் நான் குடியாத்தம் அரசு மருத்துவமனைக்கு சென்றபோது எனது மகள் மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தார். ஒரு வாரம் எனது மகள் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று குடியாத்தம் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் புகார் அளித்தார். இவ்வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

எனது மகளும், ஆஜர் 1வது எதிரி குமரவேல் என்பவரும் காதலித்து தனியாக திருமணம் செய்து கொண்டார்கள் என்றால் சரிதான். எனது மகள் திருமணம் செய்த விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். எனது மகள் காதலித்து திருமணம் செய்துகொண்டதால் ஆரம்பத்தில் எனக்கு பிடிக்கவில்லை என்றால் சரியல்ல. திருமணத்திற்கு பின் எனது மகளும் மருமகனும் நான் வசிக்கும் ஆம்பூர் பகுதியில் குடும்பம் நடத்தவில்லை என்றால் சரிதான். எனது மகளை அடித்ததாக கேள்விபட்டு நானும், எனது மகன் திருக்குமரன் என்பவரும் காவல் நிலையத்திற்கு சென்று புகார் அளித்தோம் என்றால் சரிதான். எனது மகள் எனக்கு அவரை அடித்துவிட்டதாக தகவல் சொன்னதன் பின்பு மருத்துவமனையில் சென்று தான் எனது மகளை பார்த்தேன் என்றால் சரிதான். எனது மகளை அடித்துவிட்டதாக போனில் சொல்லிதான் எனக்கு தெரியும் என்றாலும், நேரடியாக நான் பார்க்கவில்லை என்றாலும் சரிதான்.

எனது மகளை யாரும் அடிக்கவில்லை என்றாலும், எனது மகளுக்காக அடித்துவிட்டதாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. எனது மகள் 1வது எதிரியை திருமணம் செய்ததும் எனக்கு பிடிக்காததால் ஏதாவது செய்யவேண்டும் என்ற எண்ணத்தில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Sd/–R.Saranya.,
Judicial Magistrate,
Gudiyatham.